

# கோவிட்-19 ( COVID-19) தடுப்பூசி பற்றி நீங்கள் எவற்றை அறிந்து கொள்ள வேண்டும்

March 2021

**கொரனா வைரசு நோய் 2019 (COVID-19) ற்குரிய தடுப்பூசியானது COVID-19 ற்கு எதிராகப் போராடுவதற்கு ஒவ்வொருவருக்கும் உதவி புரியும் . தடுப்பூசி பற்றி உங்களுக்குச் சில கரிசனைகள் இருக்கக் கூடும் அல்லது நீங்கள் சில தகவல்களைக் கேட்டிருப்பீர்கள் அவை பற்றியும் திட்டமாக உங்களுக்குத் தெரியாமல் சில விடயங்கள் இருக்கக் கூடும். COVID-19 தடுப்பூசி பற்றி எழக்கூடிய பொதுவான பல கேள்விகளுக்கும் விடைகள் இதோ தரப்படுகின்றன.**

## தடுப்பூசி பாதுகாப்பானது என்றும் ,இது அவசரமாகச் செயற்படுத்தப்படவில்லை என்றும் எப்படி எமக்குத் தெரியும் ?

கனடாவில் பயன்பாட்டில் உள்ள ஏனைய மருந்துகளைப் போல ஹெல்த் கனடா ( Health Canada) எனும் சுகாதாரப்பிரிவினர் COVID-19 தடுப்பூசி பாதுகாப்பானதும் ,வினைத்திறன் கொண்டது என்பதனையும் பரிசோதித்து உறுதிப்படுத்தி உள்ளனர். ஒரேயொரு வித்தியாசம் யாதெனில் COVID-19 தடுப்பூசி தொடர்பான பரிசோதனைகளும் , மருத்துவ சோதனைகளும் மக்களுக்கு விரைவாக உதவும் பொருட்டு வேகமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. Health Canada கனடா சுகாதார சேவை நிறுவனத்தின் பரிசோதனைகளின் பிரகாரம் அதனடிப்படையில் கனடா அரசாங்கமானது 16 வயதுக்கும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் போடுவதற்கு அனுமதி அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அவர்கள் சுகதேகிகளாகவும் , தடுப்பூசி ஏற்றப்படக்கூடிய நிலையிலும் இருக்கும் பட்சத்திலும்) .

## COVID-19 நோயை இத்தடுப்பூசி எனக்குக் கொண்டுவருமா?

தடுப்பூசி மருந்து என்பது ஒரு உயிருள்ள வைரசுக் கிருமி அன்று. இது உங்களுக்கு COVID-19 நோயைக்கொண்டு வராது.

## நான் இத் தடுப்பூசியை எடுத்தால் COVID-19 நோய்க்கு முற்றாக நிர்ப்பீடனம் (எதிர்ப்புச் சத்தியை) பெற்று விடுவேனா?

எந்த ஒரு தடுப்பூசியும் 100% ஒரு நோயினைத் தடுக்க முடியாது. உங்களது உடலுக்கு நிர்ப்பீடனத்தை வளர்த்துக் கொள்ள காலம் தேவைப்படும் .அதனால் உங்களுக்கு இரு தடவை , இரு அளவுகளாக தடுப்பூசி தேவைப்படும் .

COVID-19 ஐத்தடுப்பதில் தடுப்பூசியானது 94 ல் இருந்து 95 % வீதம் வினைத்திறன் கொண்டது. இரண்டாவது தடவை எடுக்கும் அளவின் பின்னர் எடுத்து இரு கிழமைகளால் உங்களது உடலில் எதிர்ப்புச்சத்தி அதி உச்சமான மட்டத்திற்குச் செல்லும். இரு தடவைக்குரிய தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டபின்னும் உங்களையும் ,மற்றவர்களையும் COVID-19 லிருந்து பாதுகாக்க எல்லாவிதமான பாதுகாப்பு நடைமுறைகளான PPE எனப்படும் தன்னைத்தான் பாதுகாக்கும் உபகரணம் அல்லது கருவிகளான PPE, மற்றும் உங்களது கைகளைக்கழுவுதல் மற்றும் சமூக இடைவெளி , தனி ஒவ்வொருவருக்கும் இடையிலான இடைவெளி என்பன பின்பற்றப்பட வேண்டும்.

## தடுப்பூசியின் பக்கவிளைவுகள் ஆபத்தானவையா?

தடுப்பூசியினால் வரக்கூடிய பாரதூரமான பக்கவிளைவுகள் என்பது மிகவும் அரிதானது .
*உதாரணமாக 100 பேரில் 90 பேர் எவ்விதமான பக்கவிளைவுகளையும் அனுபவிக்கமாட்டார்கள்.
*10 பேரில் 100 பேர் இலேசான பக்கவிளைவுகளினை எதிர் கொள்வர். உதாரணமாக எந்த இடத்தில் தடுப்பூசி போடப்பட்டதோ அவ்விடத்தில் ஓர் புண் மாதிரியான நோ ஏற்படல்.

இம்மாதிரியான பக்க விளைவுகள் எதிர் பார்க்கப்படும் ஒன்று தான் அவை ஒன்றும் பாரதூரமானவை அல்ல பொதுவாக இது இரண்டாவது தடவை தடுப்பூசி எடுத்த பின்னரே நடை பெறும். ஒவ்வாமைக்குரிய தாக்கங்கள் மிகவும் அரிதாகவே நடை பெறும். எந்த ஒரு தடுப்பூசிக்கும் இது பொருந்தும் .

## COVID-19 தடுப்பூசி mRNA தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது. இது எனது DNA யினை மாற்றியமைக்கக் கூடியதா?

COVID-19 தடுப்பூசியானது செய்தி காவும் RNA **என்ற** mRNA படிமுறையைப் பயன்படுத்துகின்றது . இது COVID-19 வைரசுவிற்கு வெளியாக உள்ள ஒரு துண்டு சுவர் அல்லது மேலணி ஒன்றினை ஒரு குறுகிய காலத்திற்கு உருவாக்கும்படி அல்லது தோற்றுவிக்கும்படியான செய்தியை உங்களது உடலிலுள்ள கலங்களுக்கு mRNA ல் உள்ள குறியீட்டுக் கோவை ஒரு செய்தியை வழங்கும். இத் துண்டு வைரசு உங்களைத் தாக்காது ஆனால் உங்களது நிர்ப்பீடனத்திற்கு அடையாளம் கண்டு வைரசுடன் போராடத் தயாராவதற்கு இது போதுமானதாக இருக்கும். தடுப்பூசியிலுள்ள mRNA உங்களது DNA யினை மாற்ற முடியாது.

## எனக்கு முன்னரே COVID-19 தொற்று நோய் ஏற்பட்டிருந்திருந்தாலும் ., நானும் தடுப்பூசி எடுக்கவேண்டுமா அல்லது நான் ஏற்கனவே இந் நோய்க்கு எதிர்ப்புச் சத்தியைப் பெற்று விட்டேனா?

COVID-19 லிருந்து குணமடைந்திருந்தாலும் நீங்களும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும்படி ஊக்குவிக்கப்படுகிறீர்கள் ஏனெனில் இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் முற்றாகப் பாதுகாக்கப்படுகிறீர்கள் என்பதனை உறுதி செய்யும் பொருட்டு ஆகும்.

## நான் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் அது ஏதாவது ஒரு விதத்தில் ஏதேனும் வித்தியாசத்தைத் தோற்றுவிக்குமா? இனியும் நான் பொதுச் சுகாதார விதிகளை அனுசரித்து நடக்க வேண்டுமா?

நீங்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் உங்களையும் ,உங்கள் அன்புக்குரியவர்களையும் ,உங்கள் சமூகத்தினையும் தொற்றிலிருந்தும் , நோயிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளலாம் .எல்லோரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டால் இது உயிர்களைக் காக்க உதவுவதுடன் COVID-19 பெரும்பரவலிலிருந்து கனடாவானது மீளுவதற்கு உதவியளிப்பதாக அமையும். கூடுதலானோர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் பொதுச்சுகாதார நடைமுறைகளாக உள்ள ஆள் இடைவெளி பேணுதல் , பல முடக்கச் செயற்பாடுகள் நீங்கி , பூட்டிய நிறுவனங்கள் திறப்பது போன்ற கட்டுப்பாடுகள் தளர்ந்து பின் அவற்றின் முற்றான முடக்கம் நிற்பாட்டப் படும் அல்லது அவை தேவையற்றவையாக மாறும் .

NORTH TORONTO
Ontario Health Team

தடுப்பூசி பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள சுகாதார அமைச்சின் இணையத்தளமான https://covid-19.ontario.ca/covid -19-vaccines-ontario என்ற இணயத் தளத்திற்குச் செல்லவும். மேலும் இது பற்றி உங்களுக்கு ஏதேனும் கரிசனை இருப்பின் உங்களது குடும்ப வைத்தியருடன் கலந்து ஆலோசிக்கவும்.